**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No. 30/2023**

**Deposition of Witness :PW2**

| Name | கமலம் | Taluk | |
|---|---|---|---|
| Husband Name | பழனியப்பன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 24.09.2025.** | | | |

**குறுக்கு விசாரணை**

1) மனுதாரர் என்ன பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் குழந்தைகளுக்கு வாழ்வாதாரம் கேட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். என் மகளின் திருமணத்தின்போது 8 1/2 பவுன் நகை போட்டதாக சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சில நகைகள் கையில் இருந்ததால் போட்டேன். என் மகள் எங்களுடைய வீட்டின் அருகே வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார் என்று சொல்லியுள்ளபோது அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கேட்டால் வாங்கி தருகிறேன். மனுதாரர் என்னுடன் வசித்து வருகிறார் என்றும், வழக்கிற்காக தனியாக வாடகை வீட்டில் வசித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) என் மகள் என்ன வேலைக்கு செல்கிறார் என்றால் ஒப்பந்த அடிப்படையில் டெக்சில் கூலி வேலைக்கு செல்கிறார். தினமும் ரூ. 500 கொடுப்பார்கள் என்றால் இல்லை. ரூ. 350 கிடைக்கும். எல்லா நாட்களும் வேலை இருக்காது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரர், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுடன்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

கூட்டுகுடும்பமாக வசித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மருமகன் என்ன வேலை செய்கிறார் என்றால் Jio cable நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றும், மாதம் ரூ. 60 ஆயிரம் சம்பளம் வாங்குகிறார் என்று சொன்னார்கள். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் பொருளாதார நிலைமை கஷ்டமாக இருக்கிறது என்று கூறி 1ம் எதிர்மனுதாரரிடம் பொருளாதார உதவி கேட்டதாக சொல்லியுள்ள விவரம் என் மகள் சொல்லித்தான் தெரியுமா என்றால் சரிதான்.

3) என் மகளிடம், 1ம் எதிர்மனுதாரர் வரதட்சணை கேட்டதாக காவல் நிலையத்தில்புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் கொடுத்துள்ளோம். அதற்கான மனு ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் எந்த வரதட்சணை கொடுமை செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் கர்ப்பமாக இருந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் அவரை சரியாக பார்க்கவில்லை என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் மகள் கர்ப்பமாக இருந்த காலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் நல்லமுறையில் பார்த்து கொண்டதாக மனுதாரர் அவருடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் சரியாக பார்த்து கொள்ளவில்லை.

4) கடந்த 13.10.2023ம்தேதியன்று என் மகளுக்கு குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டு, 1ம் எதிர்மனுதாரரின் உறவினர்கள் வந்து பார்த்தபோது நாங்கள் அனுமதிக்கவில்லை என்றும், அதுசம்பந்தமாக எங்களுக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் சண்டை வந்தது என்று சொன்னால் சரியல்ல. அது சம்பந்தமாக தாந்தோணிமலை காவல் நிலையத்தில்புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளபோது அதற்கான மனு ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 12.03.2020ம்தேதி 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை தொலைபேசியில் அழைத்து வரதட்சணை கேட்டதாக அதற்காக 16.03.2020ம்தேதி புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளது

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்திருந்தால் காவல் நிலையத்தில் மனு ரசீது கொடுத்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

5) 1ம் எதிர்மனுதாரருக்கு 2ம் திருமணம் செய்து வைப்பதாக 2முதல் 5 எதிர்மனுதாரர்கள் என் மகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாக சொல்லியுள்ளபோது அது சம்பந்தமான ஆதாரங்களை நான் நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல் நிலையத்தில் தாக்கல் செய்துள்ளேன். கடந்த 06.03.2021ம்தேதி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரரை என் மகளுடன் சேர்த்து வாழ வைக்ககோரி புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என் மகளுக்கு நகை போட்டதாக சொல்லியுள்ளது பொய் என்றும், மேற்படி நகைகள் தாந்தோணிமலை IOB BANK ல் அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 14.03.2021ம்தேதி 1முதல் 5 எதிர்மனுதாரர்கள் எங்களிடம் தகராறு பண்ணதாகவும், அதனடிப்படையில் தாந்தோணிமலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக அதனடிப்படையில் குற்ற எண். 155/2021ல் வழக்கு பதிவு செய்ததாக சொல்லியுள்ளபோது பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளதால் விசாரணைக்குபின் முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6) 1ம் எதிர்மனுதாரர் சம்பாதித்த பணத்தை எல்லாம் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்துவிடுவதாக சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. 1மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் , மனுதாரரை விலக்கிவைத்துவிட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு மற்றொரு திருமணம் செய்து வைப்பதாக சொல்லியுள்ள சங்கதி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், என் மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சிம் ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/-கமலம்

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்